RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s314

OPEN ACCESS

# புதின இலக்கியம் காட்டும் விளிம்புநிலை மக்களின் சமூக மாற்றம்

கி. புவனேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# The Novel Literature Shows the Social Change of Marginalized People

K. Bhuvaneswari [a, *]

[a] Department of Tamil, Chellammal women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: bhuvanacwc@gmail.com

Received: 18-04-2021
Revised: 10-04-2022
Accepted: 18-05-2022
Published: 15-07-2022

Check for updates

## ABSTRACT

Literature has always served as an important source that widely reflects the social changes at all levels. Contemporary literature like novels are no exception to this phenomenon. This paper seeks to explore the social progress and changes experienced by marginalised sections of the society such as deva dasis, widows. destitute women, transgenders and tribal people with reference to the selected novels. An attempt has been made to unfurl how education aids deva dasis and widows to attain progress in their lives, how destitute women stand on their own and live independently, as well as the social progress in the lives of tribals and the growing social acceptance of transgenders in our society.

**Keywords:** Marginalized People, Novel Literature, Social Changes, Novel Literature

## முன்னுரை

மனித சமுதாயம் உருவாகி பல்லாயிரம் ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. மனித சாதியின் வரலாறு வற்றாத நதியாக ஓடிக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே உள்ளன. அம்மாற்றங்கள் மனிதனின் இலக்கியங்களின் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் தொட்டு இக்கால இலக்கியங்கள் வரை பதிவுச் செய்துள்ள மாற்றங்களை நோக்கினால் இவை தெள்ளென விளங்கும். சமூக மாற்றத்தின் இன்றியமையாத கருவியாக கல்வி இன்றைய காலகட்டத்தில் விளங்குகிறது. “படிப்பு வளருது பாவம் தொலையுது” என்று இதனையே பாடினார் பாரதியார். மனித சமூகத்தில் விளிம்பு நிலை மக்களின் சமூக மாற்றம் தற்கால இலக்கியமான புதினங்களில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

வாஸந்தியின் விட்டு விடுதலையாகி மற்றும் அக்னி குஞ்சு, இராஜம் கிருஷ்ணனின் குறிஞ்சித்தேன், மற்றும் கௌதமன் நீல்ராஜ் அவர்களின் புனிதம் தேடும் புதினம் ஆகிய நான்கு புதினங்களின் வழி விளிம்பு நிலை மக்களாகக் கருதப்படும் திருநங்கைகள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், தேவதாசிகள் போன்றோர் வாழ்வில் நிகழ்ந்த மாற்றங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## விளிம்பு நிலை மக்கள்

விளிம்பு என்ற சொல்லிற்கு ஓரம், கரை, கண்ணிமை, கடை என்ற பொருளினை அகராதிகள் வழங்குகின்றன. சாதி, பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் சமூகத்தின் ஒரு பிரிவினர்

மையத்தில் வாழக்கூடியவர்களாகவும், அவர்களைக் காட்டிலும் கீழ்நிலையில் உள்ள ஒரு பிரிவினரையே விளிம்பு நிலையினர் என்று வரையறை செய்கின்றனர். அவ்வகையில் சாதிய அடிப்படையில் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ள மக்கள், பழங்குடிமக்கள், பிச்சைக்காரர்கள், நாடோடிகள், திருநங்கைகள், தெருவோரம் வசிக்கும் மக்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விலைமகளிர், தீர்க்க முடியாத நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் என இவர்கள் போன்றோரை விளிம்பு நிலையினராக அடையாளம் காணுகின்றனர்.

## தேவதாசிகள் (விட்டு விடுதலையாகி)

முதல் பெண் மருத்துவரான முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் 1920 ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1927 ஆம் ஆண்டே தேவதாசி முறையை எதிர்த்து குரல் கொடுத்தார். அதன் தொடர்ச்சியாக தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை அக்டோபர் 9 ஆம் நாள் நடைமுறைப்படுத்த முயற்சித்தார். ஆனால் அப்போது இராஜாஜி அவர்கள் தலைமை வகித்ததால் அம்முறையை நடைமுறைப்படுத்தவில்லை. இந்தியா விடுதலை அடைந்த பிறகு ஓமந்தூரார் தலைமை வகித்த போது முத்துலட்சுமி ரெட்டி மீண்டும் குரல் கொடுத்து தேவதாசி ஒழிப்புச் சட்டம் அக்டோபர் 9 ஆம் நாள் 1947 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் காரணமாக தேவதாசிகள் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் கோயில்களில் பெண் குழந்தைகளை நேர்ந்து விடும் மரபு ஒழிக்கப்பட்டது.

தேவதாசி இனத்தில் பிறந்து அவ்வினத்தின் கொடுமைகளை அனுபவித்து அக்கொடுமைகள் இனி எந்த பெண்ணுக்கும் நடக்கக் கூடாது என்பதை மனதில் கொண்டு போராடியவர்தான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ஆவார். இதன் விளைவாக 1936 ஆம் ஆண்டு தாசிகள் மோசவலை அல்லது மதி பெற்ற மைனர் என்ற புதினத்தை எழுதி வெளியிட்டார். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டிக்குப் பல நேரங்களில் பல ஆலோசனைகளை வழங்கினார். இருவருக்குமிடையே கடித போக்குவரத்து இருந்தது. பெண்கள் அஞ்சி ஒடுங்கிய காலத்தில் வீரத்துடன் இந்து மத மூடநம்பிக்கைகளே பெண் இழிவுக்குக் காரணம் என்று குரல் கொடுத்த வீரமங்கை இராமாமிர்த அம்மையார். இவர் சிறுவயது முதல் 70 வயது வரை காங்கிரசு, சுயமரியாதை இயக்கம், திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என பல இயக்கங்களிலிருந்தும் முறையான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அதற்கு காரணம் குடும்பப் பின்னணியும் கல்வித் தகுதியும் இல்லாததுதான் எனப் பலர் கருதுமளவிற்கு இயக்கங்கள் அவருக்கு முறையான அங்கீகாரம் வழங்கவில்லை போலும். கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பதற்கு இணங்க தனது 70 வயதிலும் பல இயக்கங்களில் மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டவர் மூவலூர் மூதாட்டி.

இவ்வாறு தேவதாசிகளின் இழிநிலைக்குப் பலர் போராடி அந்நிலையிலிருந்து தேவதாசி சமூகம் மாற்றம் பெற்ற நிகழ்வுகளை இலக்கியங்களும் பதிவு செய்கின்றன. அவற்றுள் வாஸந்தி அவர்களின் விட்டு விடுதலையாகி என்ற புதினம் தேவதாசி சமூகத்தில் பிறந்த இரண்டு பெண்களின் வாழ்நிலை எத்தகு மாற்றத்தை அடைகின்றன என்பதை முதன்மையாகக் கொண்டு தேவதாசிகளின் வாழ்நிலையையும், அவர்களின் சமூக மாற்றத்தை முன்னெடுப்பதாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளது. அதன்வழி தேவதாசிகளின் வாழ்நிலையை கஸ்தூரி என்ற கதாப்பாத்திரத்தின் மூலம் காட்டுகிறார். தேவதாசிகள் சமூகத்தில் இருந்து விலகி கல்வி கற்று தேவதாசி என்ற குலத்தையே அழிக்க வேண்டும் என்ற துடிப்புடன் போராடும் பெண்ணாக இலஷ்மி என்ற கதாப்பாத்திரமும் அமைந்து தேவசாதிகளின் சமூக மாற்றத்திற்கு வழிவகைச் செய்கிறது. கோவிலில் இறைவனுக்குப் பணி செய்யும் நோக்கத்துடன் தன் வாழ்வை அர்ப்பணித்த பெண்களை ஆதிக்க வர்க்கமும், ஆண் வர்க்கமும் தங்கள் சுகத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டதன் விளைவே தேவதாசி என்ற குலத்தோற்றம். கலை வளர்க்கப் பிறந்த மாதர்களை உடலை விற்கும் சமூகமாக மாற்றியது காலம். அதே காலம் தான் இன்று அவர்கள் வாழ்வையும் மீட்டெடுத்து இருக்கிறது. அவர்கள் வாழ்விலும் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டும் விதமாகவே வாஸந்தி அவர்களின் விட்டு விடுதலையாகி புதினம் அமைக்கப்பட்டுள்ளது.

தேவதாசிக்குப் பிறந்த மகளும் ஒரு தேவதாசியாக தான் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நியதியை உடைக்கும் வண்ணம் நாவலில் துளசி என்ற தேவதாசிக்குப் பிறந்த மகள் இலஷ்மியின் கதாப்பாத்திரம் அமைந்துள்ளது. சிறுவயதில் இருந்தே தன் தாயின் நிலையை நன்கறிந்து வளர்ந்தவள் இலஷ்மி. அதனால் அத்தகு ஒரு வாழ்க்கை தனக்குத் தேவையில்லை என்பதில் விடாபிடியாக இருந்தாள். அதன் காரணமாகப் படிப்பதில் ஆர்வத்தைக் காட்டினாள். இதனை,

“டாக்டர் படிப்பு முடிச்சு, இங்கிலாந்துக்கும் போய் பெரிய படிப்பு முடிச்சுவந்து டாக்டர் வேலை பார்க்கறா. அவளை மெச்சி அரசு மேல் சட்டசபையிலே உறுப்பினரா ஆக்கியிருக்கு. எவ்வளோ பெரிய கௌரவம் என்கிறே. அங்க அவ தேவதாசி ஒழிப்புச் சட்டத்துக்காகப் பேசற பேச்சையெல்லாம் விளாவாரியா பேப்பர்லே போடறாங்க” (Vaasanthi, 2012).

என்ற பதிவின் வழி கல்வியின் மூலம் தன் குலத்தை மாற்றுப்பாதையில் அழைத்துச் செல்லத் துடிக்கும் ஒரு பெண்ணின் சாதனையைத் தெரியப்படுத்துகிறது. அதோடு கல்வி ஒன்றுக்கே அனைத்தையும் மாற்றும் ஆற்றல் உண்டு என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. கல்வியின் மூலம் தேவதாசி என்ற குலத்தோற்றமே இச்சமூகத்திற்குத் தேவையில்லை என்றும், அனைத்து பெண்களும் கல்வி கற்று மேனிலை எய்தவும், கல்வி மாற்றுச் சமூகத்திற்கு வித்திடும் அறிவார்ந்த கருவி என்பதையும் இதன் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

## விதவைகள் (விட்டு விடுதலையாகி)

வாஸந்தி அவர்களின் விட்டு விடுதலையாகி என்ற புதினத்தின் சிறு பகுதி விதவைப் பெண்ணின் மனநிலையையும் பதிவு செய்கிறது. ஒரு பெண் திருமணமாகி, சில நாட்களோ அல்லது பல ஆண்டுகள் கழித்தோ தன் கணவன் இறந்த நிலையில் விதவை என்ற பெயரை அடைகிறாள். இச்சமூகத்தில் விதவை என்ற நிலையை அடைந்த பெண்களுக்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. ஒரு வயது முதிர்ந்த பெண் விதவை என்ற நிலையை அடைவதைக் காட்டிலும், ஒரு இளம் பெண் விதவை என்ற நிலையை அடைந்தால் இச்சமூகத்தால் அப்பெண் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடுகிறது. அதில் மிகப்பெரிய இன்னல் என்னவென்றால் பிற ஆடவர்களால் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுவது. அதன் காரணமாக புகுந்த வீட்டோரால் தகாத பேச்சுக்களைக் கேட்பது என அவள் வாழ்வே சூன்யம் நிறைந்ததாக மாற்றப்படுகிறது. இத்தகு நிலைகளை எல்லாம் சந்திக்கும் பெண்களுக்கு மாற்றம் தரும் விதமாக ‘விட்டு விடுதலையாகி’ என்ற புதினம் விதவைகளின் வாழ்நிலை இவ்விதம் அமைய வேண்டும் என்ற பதிவை ‘யோகாம்பாள்’ என்ற கதாப்பாத்திரத்தின் வாயிலாகப் பதிவு செய்கிறது.

மாமனாரால் தகாத உறவுக்கு ஈடுபடுத்தப்படும் விதவைப் பெண்ணான யோகாம்பாள் அதிலிருந்து தப்பித்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள நினைக்கிறாள். அச்சமயத்தில் இந்நாவலின் முதன்மைக் கதாப்பாத்திரம் இலஷ்மி அவளைக் காப்பாற்றி, அவளின் அறியாமையை விளக்கி, அவளுக்குப் புதுவாழ்வை அமைத்து தருகிறாள். இதனை புதினத்தில்

“என் கூட இரு உன்னைப் படிக்க வைக்கறேன்

இந்த வேஷத்தை யெல்லாம் எடுத்துட்டு புது வாழ்க்கை வாழலாம்

யோகுவின் முகத்தில் குழப்பம் படர்ந்தது

முடியுமாக்கா? எல்லாரும் சும்மா இருப்பாளா?

உனக்கு படிக்கணும்னு இருக்கா இல்லையா?

யோகுவின் கண்களில் பிரகாசம் தெரிந்தது.”

என்ற பதிவு ஒரு விதவைப் பெண்ணுக்கான மாற்றுச் சமூகத்தைக் காட்டிடும் வழி (Vaasanthi, 2012). விதவை என்ற நிலையை அடைந்தால் அதன் பின் தன் வாழ்வே இல்லையென்ற நிலையில்

வீட்டில் முடங்கிவிடாமல், வீட்டைத் தாண்டியும் ஒரு உலகம் உள்ளது அதனையும் நாம் காண வேண்டும் என்ற மாற்றத்தை கல்வி வழங்குகிறது என்பதனை, 1927 ஆம் ஆண்டு மகத் மாநாடு முடிந்ததும் அங்குள்ள பெண்களின் கூட்டத்தில் பேசிய அம்பேத்கர்,

"ஆண்களைப் போலவே பெண்களுக்கும் கல்வி தேவை என்பதை உணருங்கள். எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டால் பெரிய அளவில் முன்னேற முடியும். நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படித்தான் உங்கள் பிள்ளைகளும் இருப்பார்கள். உங்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கை நல்லொழுக்க நெறியில் இயங்குமாறு செய்யுங்கள். உங்கள் மகன்கள் இவ்வுலகில் தங்கள் தனி முத்திரையைப் பதிக்கும் வகையில் அவர்களை உருவாக்குங்கள்."

என்று அறிவுறுத்தினார். பெண்களும் கல்விக் கற்க வேண்டும். அவர்கள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதில் அவர் உறுதியான நிலைப்பாடு கொண்டிருந்தார். அதனால் விதவை என்ற நிலையை அடைந்தால் மறுமணம் செய்து கொள்வதற்கோ அல்லது கல்வியின் மூலம் தன் திறனை வளர்த்துக் கொண்டோ இச்சமூகத்தில் அனைவரையும் போல மகிழ்வான வாழ்க்கையை விதவைகளும் அமைத்துக் கொள்ள முடியும். இதனை,

"விட்டு விடுதலையாகி நிற்பாய் இந்தச்

சிட்டுக் குருவியினைப் போலே"

என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப விளிம்புநிலை மக்களான தேவதாசிகள், விதவைகள் சமூகத்திலிருந்து விட்டு விடுதலையாகி சிட்டுக்குருவியாய் நிற்பதை வாஸந்தியின் விட்டு விடுதலையாகி புதினம் பதிவு செய்துள்ளது நல்லதொரு சமூக மாற்றமாகக் காணப்படுகிறது (Rajasekaran, 2007).

## கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் (அக்னி குஞ்சு)

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை

அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்

வெந்து தணிந்தது காடு - தழல்

வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?"

என்ற பாரதியின் வரிகளுக்கு இணங்க அக்னி குஞ்சாக தன் தாயின் நிலைக்குத் தன் தந்தையிடம் வாதாடும் ஒரு மகளின் போராட்டத்தை இப்புதினம் மையப்படுத்துகிறது (Rajasekaran, 2007). தன் கணவன் இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொண்டு தன்னை ஏமாற்றுகின்ற சூழ்நிலையில் எந்த பெண்ணும் அதை தாங்கிக் கொள்ளும் மனநிலையில்லாமல் தவறான முடிவுகளைத் தேடுவதற்கும் அல்லது அவனைத் திருத்துவதையோ இல்லையென்றால் அவன் தவறுகளுடனே அவனை சகித்துக்கொண்டு வாழ்வதையோ தான் மேற்கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலையிலிருந்து மாறி தன் கணவன் தனக்குத் துரோகம் செய்துவிட்டு இன்னொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டிருக்கிறான் என்று அறிகையில், அவனை முற்றிலும் வெறுத்து ஒதுக்கிவிட்டு அவன் இல்லையென்றாலும் தன்னால் தனித்து வாழவும், தன் குழந்தைகளைத் தனித்து நின்று காப்பாற்றவும் உறுதிகொண்ட மனநிலை பெற்ற பெண்களாக மாற்றம் பெற்று வருவதை நம் இலக்கியங்களிலும் காணமுடிகிறது. புதினத்தில் விமலா என்ற பெண்ணின் கணவன் அவளையும், அவள் மகளையும் கைவிட்டச் சூழலிலும் அவளின் மனநிலையை

"புருஷனை முழுக்க முழுக்க நம்பியிருந்த எனக்கு, நான் ஏமாற்றப்பட்டேன்னு தெரிஞ்சபோது எத்தனை அப்செட் ஆகியிருப்பேன்னு இவ புரிஞ்சுக்கணும். காம்ப்ரமைஸ் பண்ணிட்டு வாழ எனக்கு இஷ்டமில்லே. சுமிக்கு கல்யாண வயசு இந்தச் சமயத்திலே இந்த மாதிரி ஒரு முடிவுக்கு நான் வரணும்னா எனக்கு எப்படிப்பட்ட அடி பட்டிருக்கும்னு யோசிச்சுப் பாரு" (Vaasanthi, 2009).

என்ற பதிவு கணவனால் கைவிடப்பட்ட ஒரு பெண்ணின் மனவேதனையைக் காட்டுகிறது. ஆனாலும் அவள் ஒரு தீர்க்கமான முடிவுடன் தன் வாழ்க்கையை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறாள் என்பதையும், கணவன் துரோகம் செய்தால் அதனைச் சகித்துக் கொண்டு தான் வாழவேண்டும் என்ற நிலை மாறி, தன்னால் தனித்து நிற்க முடியும் என்ற மனநிலை மாற்றத்தையும் காட்டுகிறது.

## பழங்குடிகள் (குறிஞ்சித்தேன்)

காடுகளையும், மலைப் பகுதிகளையும் தங்கள் இருப்பிடமாகக் கொண்டு, பூர்வகுடிகளின் அம்சங்களைத் தாங்கிக் கொண்டு, நாகரிகச் சமுதாயத்திற்கு வெளியே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பழங்குடி மக்கள். அம்மக்களின் வாழ்க்கை முறையை பதிவு செய்யும் வண்ணம் சில புதினங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இராஜம் கிருஷ்ணனின் 'குறிஞ்சித்தேன்' , 'சோளகர் தொட்டி' போன்றவை. இதில் குறிஞ்சித்தேன் புதினம் 'படகர் இன பழங்குடி மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்கிறது (Rajam Krishnan, 2019). அவ்வாழ்வியலின் வழி அவர்கள் சமூகத்திற்கு மாற்றம் தரும் கதாப்பாத்திரமாக நஞ்சனின் கதாப்பாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது என்பதனை,

"கட்டிட இயற்கலையில் பட்டம் பெற்ற இளைஞனாகிவிட்டான் நஞ்சன். நற்கல்வி பெற்றுவிட்ட நஞ்சன் நாட்டுப் பணியிலே ஈடுபடவரும் இளைஞர் சமுதாயத்தில் பிரதிநிதியாகிவிட்டான். எத்தனை எத்தனை ஆண்டுகளாகவோ பின் தங்கி இருந்த மலைவாழ் மக்களின் சமுதாயம் ஓர் அற்புதமான வருங்காலத்தை ஆக்கவிழிப்புக் கொண்டு துடிதுடிக்கும் இளைஞர் உலகைப் படைத்துவிட்டது என்பதன் பிரத்தியட்ச நீருபணமாகிவிட்டான் நஞ்சன்" (Rajam Krishnan, 2019).

என்ற பதிவு மலைவாழ் மக்களின் பல ஆண்டுகளுக்கான கனவு நிறைவேறிய மகிழ்ச்சியைப் புலப்படுத்துகிறது. அதோடு கல்வி என்பதே எட்டாக் கனியாக இருந்த மலைவாழ் மக்கள் சமுதாயத்தில் நஞ்சன் கல்வி கற்று, பொறியியலில் பட்டம் பெற்றான் என்ற பதிவு மலைவாழ் மக்கள் சமுதாயத்தின் முன்னேற்றத்தை மாறி வரும் சமுதாயத்தில் பறைச்சாற்றுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

1982 முதல் ஐக்கிய நாடு சபை ஆகஸ்ட் 9 ஆம் தேதியை "பழங்குடிகள் தினமாக" கடைபிடித்து வரும் சூழலில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு பழங்குடியின மொழி அழிந்து வருவதாக தகவல் வருகிறது. தமிழகத்தில் 71.50 இலட்சமும், இந்தியாவில் 104,545,716 பேர் பழங்குடிகளாக இருக்கின்றனர். 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இவ்வளவு மக்களும் எழுத்தறிவு பெற்றும், அரசு பணிகளிலும், அதிகார பணிகளிலும் இருக்கின்றனரா என்றால்? குறைவான சதவீதமே இருப்பர் எனினும் அவை மாற்றம் பெற்று வருகின்றன என்பது நிதர்சனமான உண்மை. பழங்குடி மக்கள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைய பல வழிவகை செய்யப்பட்டு வருகின்றன. விவசாய இயக்கம் மற்றும் மலைவாழ் மக்களுக்கு விவசாயம் குறித்த வகுப்புகள், கல்வி, மருத்துவம் என முன்னேற உதவுகின்றன. இவைகளெல்லாமும் பல இலக்கியங்கள் மூலம் பேசப்பட்டு வருவது தற்போதைய இலக்கியங்களில் சமூக முன்னேற்றமுடைய கருத்துகள் வெளிவருவதைக் காணமுடிகிறது.

## திருநங்கைகள் (புனிதம் தேடும் புதினம்)

அலி, பேடி, திருநங்கை, அரவாணி, உசு என பல பெயர்களால் அழைக்கப்பட்டு சமூகத்தாரால் இழிவாக பார்க்கக்கூடிய நிலையில் திருநங்கைகளின் நிலை இருந்தது. மன உளைச்சலுடன் சமூக மதிப்பும் அற்றவர்களாக குடும்பத்தாரால் வெறுத்து ஒதுக்கப்பட்டு வருமானத்திற்காக பாலியல் தொழிலில் நெடுங்காலம் தள்ளப்பட்டு இருந்தனர். குடும்பத்தை விட்டு விலகி தன்னைப்போல் உள்ள திருநங்கைகளுடன் சேர்ந்து வாழ்கிறார்கள். இன்று சமூக அங்கீகாரம், அனைத்திலும் சம உரிமை என கல்வி கற்றதின் மூலம் போராட துவங்கியுள்ளனர். இவ்வாறு சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களாகவும், அவமானங்களை மட்டும் தங்கள் வாழ்வில் சந்தித்தவர்களுமான திருநங்கைகளின் வாழ்வியல் குறித்த பதிவுகள் புதினம் இலக்கியங்களை பொறுத்தவரையில் மிகக் குறைவே.

அத்தகு பதிவுகளிலும் திருநங்கைகளின் சமூக மாற்றத்தை புலப்படுத்தும் வண்ணம் கௌதமன் நீல்ராஜ் அவர்களின் 'புனிதம் தேடும் புதினம்' என்ற புதினம் அமைக்கப்பட்டுள்ளது. இப்புதினத்தின் முதன்மைக் கதாப்பாத்திரம் சொற்கோடன் என்ற சிறுநகை திருநங்கை கதாப்பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளார். திருநங்கைகள் குறித்து இதற்கு முன்னர் படைக்கப்பட்ட சு.சமுத்திரத்தின் வாடாமல்லி, பிரியா பாபுவின் மூன்றாம் பாலின் முகம் ஆகியவற்றைக் காட்டிலும் இப்புதினத்தில் திருநங்கைகளின் வாழ்க்கை போராட்டத்தை விட அவர்களின் முன்னேற்றப் பாதையைக் கருத்தில் கொண்டு புதினத்தின் தொடக்கமே சிறுநகைக்கு அரசு அலுவலகத்தில் பணி கிடைத்து அதற்கான அழைப்பு வந்திருக்கிறது என்ற பதிவு நல்லதொரு சமூக மாற்றமாக காணப்படுகிறது. இதனை புதினத்தில்,

"சில நாட்களுக்கு முன்னதாக மத்திய அரசிடம் இருந்து வருமான வரித்துறையில் அலுவலக உதவியாளர் என்னும் பணிக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கிறீர்கள். கீழ்க்கண்ட ஆவணங்களுடன் இக்கடிதம் கண்ட பதினைந்து நாட்களுக்குள் பணியில் சேர உத்தரவிடப்பட்டுள்ளது என எழுதியிருந்தது. கரங்களில் இந்தக் கடிதம் கண்ட நாட்களில் இருந்தே சிறகடிக்கத் தொடங்கிவிட்டாள் சிறுநகை" (Gowthaman Neelraj, 2020).

என்று பதிவு செய்யப்படுகிறது. இவ்வாறு புதினத்தில் ஒவ்வொரு பகுதியும் கால மாற்றத்தைக் கருத்தில் கொண்டும், திருநங்கைகளின் சமூக மாற்றத்தை முன்னெடுக்கும் வண்ணம் சிறுநகையை படித்த திருநங்கையாக, அரசு அலுவலகத்தில் பணிபுரிபவளாகவும், பெற்றோரால் ஆதரிக்கப்படுபவளாகவும் காட்டப்பட்டிருப்பது மிகச் சிறந்த சமூக மாற்று பதிவுகளாக அமைகின்றன. இவ்வாறு புதின இலக்கியங்களில் மேலும் பல சமுதாய மாற்று சிந்தனைகளை பதிவு செய்த வண்ணம் இருக்கின்றன. அவ்வாறு பதிவு செய்வதின் வழி நல்லதொரு சமூகம் உருவாகவும், சமுகத்தில் அனைவரும் சமம், அனைவருக்குமான நிலைபாடுகளை அனைவரும் அறிந்து கொண்டு மாற்று சமூகத்திற்கு வித்திட வழிவகுக்கிறது.

## முடிவுரை

இன்று உலகம் முழுவதிலும், அம்பேத்கர் முதன்முதலாக பள்ளிக்கு சென்ற நாளான நவம்பர் 7 ஆம் நாளை உலக மாணவர்கள் தினமாகக் கொண்டாடுகிறது என்றால் அங்கு அம்பேத்கரின் முயற்சியினாலும், உழைப்பினாலும் ஒரு சமூக முன்னேற்றம் நடந்துள்ளது என்பது திண்ணம். அதுபோலத்தான் இன்றைய நிலையில் பல திருநங்கைகள் கல்வி கற்று உயர் பதவிகளில் பணியாற்றுவதும், மேலும் பல விதவைகள் தங்களின் குழந்தைகளின் நலனுக்காக கல்வி, பணி என சமூக மாற்றத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே சமூகத்தில் நாம் அனைவரும் சமம் என்ற நிலையை அனைவரும் எதிர்பார்க்க வேண்டியது. ஆனால் சமூகத்தின் சில மனிதர்கள் மட்டும் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களாகவும், புறந்தள்ளப்பட்டவர்களாகவும் காணப்படுவது நம் சமூகத்திற்கே ஏற்பட்ட மிகப்பெரிய இழிவு. அத்தகு இழிநிலையிலிருந்து மீள வேண்டும் என்றால் நாம் மேற்கண்ட விளிம்பு நிலை மக்களின் சமூக மாற்றங்களாக புதின இலக்கியங்கள் பதிவு செய்தவைகளை நடைமுறை வாழ்க்கையிலும் கடைப்பிடித்தோமானால் நம் சமூகம் உலகில் தலைச்சிறந்த சமூகமாக தலைநிமிர்ந்து நிற்கும் என்பது திண்ணம். மாற்றம் ஒன்றே மாறாதது சிந்திக்கும் சமூகமாய் பரந்த மனப்பான்மை கொண்ட சமூகமாய், அன்பான சமூகமாய் மாறுவது அனைவருக்கும் நலம். அந்நாள் நெடுந்தொலைவில் இல்லை.

## References

Gowthaman Neelraj, (2020) Punitham Thedum Puthinam, International Institute of Tamil Studies, Chennai, India.

Rajam Krishnan, (2019) Kurinji Then, Thagam Pathippagam, Chennai, India.

Rajasekaran, (2007) Bharathiar Kavithaikal, Sri Hindu Pathippagam, Chennai, India.

Vaasanthi, (2009) Agnikunj, Kavitha Veeliyeedu, Chennai, India.

Vaasanthi, (2012) Vittu Viduthalaiyagi, Kavitha Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License